DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.335/2005**

**P.W.2**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | வானமாமலை |
| Father Name | : | மாணிக்கம் |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.01.2025.

(6 வது எதிரி ஆஜர். 1 மற்றும் 7 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 மற்றும் 7 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் துணை காவல் கண்காணிப்பாளராக காவல் துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். நான் வழக்கு சம்பவ சமயத்தில் அண்ணா நகர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 30.06.2001ம் தேதி மதியம் 02.15 மணியளவில் முன்னாள் தமிழக முதல்வர் திரு.மு.கருணாநிதி அவர்களை கைது செய்தது சம்பந்தமாக திராவிட முன்னேற்ற கழக கட்சியை சார்ந்தவர்களை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்திருந்தார்கள். அது சம்பந்தமாக நான் போலிஸ் பார்ட்டி சகிதம் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பணியில் இருந்தேன். அப்போது திடீர் நகர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.கிருஷ்ணன் மற்றும் சார்பு ஆய்வாளர் திரு.நெல்சன் அகியோர்கள் தி.முக.மாவட்ட செயலாளராக இருந்த திரு.வேலுச்சாமி அவர்களுடன் மற்றும் பலர் கட்சிக்காரர்களையும் கைது செய்து

நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நீதிமன்றத்திற்கு கொண்டு வந்தார்கள். அப்போது இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் மாறன், செல்வம், நேரு, பர்மா கண்ணன், பிச்சை, பிச்சை கணேசன் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் நீதிமன்ற காவலில் நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஜன்னல் கண்ணாடி மற்றும் கதவுகளை உடைத்து சட்டம் ஒழுங்கு பிரச்சனையை ஏற்படுத்தினார்கள். அப்போது அவர்களை நான் தடுக்க முயன்ற போது என்னை அவர்கள் பணி செய்ய விடாமல் தடுத்தார்கள். அவர்கள் எங்களை கையால் அடித்ததில் காவலர்களுக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. எதிரி பர்மா கண்ணன் கல்லால் என்னை அடித்ததில் வலது காதுக்கு கீழ் ரத்தக்காயம் ஏற்பட்டது. எதிரிகள் பொதுச்சொத்தை சேதம் விளைவித்தது சம்பந்தமாகவும் என்னை தாக்கியது சம்பந்தமாகவும் அண்ணா நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் திரு.பழனிச்சாமி என்பவரிடம் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.